**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

O.S.No.33/2025

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 22.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வா.சா.2– அண்ணாதுரை த/பெ முருகன்</u>**

**<u>1 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வழக்கு சொத்தில் அருகில் 1ம் பிரதிவாதி தமிழரசன் குடும்பத்தாருக்கு என்ன அளவுகளில் சொத்து உள்ளது என்றால் அளவுகள் தெரியாது சாட்சி கையொப்பம் மட்டும் தான் செய்தேன். எந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் ஒண்டிமுத்து முருகேசனிடம்13.12.2024 அன்று கிரையம் வாங்கிய சொத்திற்கு நான் சாட்சி கையொப்பம் செய்தேன். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. நான் பிறந்த தேதி மாதம் வருடம் எனக்கு ஞாபகமில்லை. முருகேசனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் கிரைய வழியில் முருகேசன், 1, 2 பிரதிவாதிகளிடம் கிரையம் வழியில் 14.09.2005 ல் பாத்தியப்பட்டதாகும். 14.09.2005 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்யவில்லை. மேற்படி 14.09.2005 பத்திரம் எழுதும் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. 14.09.2005 பத்திரத்தில் என்ன நான்கெல்லை உள்ளது என்று எனக்குத் தெரியாது.

3. 14.09.2005 பத்திரத்தில் காண்பிக்கப்பட்ட நான்கெல்லையில் தான் ஒண்டிமுத்து வாங்கிய கிரையப்பத்திரத்தில் நான்கெல்லையாக குறிப்பிட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஒண்டிமுத்து வாங்கிய சொத்தில் கிழமேல், தென்வடல் அளவு தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. நான் பத்திரத்தில் சாட்சிக்கையொப்பம் மட்டும் செய்தேன் என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்கள் எனக்குத் தெரியாது என்றால் சரிதான் அவர் விற்பனை செய்தார் அவர் வாங்கினார் அவ்வளவு தான் தெரியும்.

4. ஒண்டிமுத்து வாங்கியதாக சொல்லப்படும் இடத்தில் வீடு எதுவும் உள்ளதா என்றால் காலி இடமாகத்தான் உள்ளது. தமிழரசன் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்தில் எந்த பகுதியில் வீடு உள்ளது என்றால்

எனக்குத் தெரியாது. தமிழரசன் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்திற்கு யார் பெயரில் ஏற்கனவே பட்டா இருந்தது என்றால் ஆரம்பத்தில் அழகுராஜாபெருமாள் பெயரில் இருந்தது. அழகுராஜாபெருமாள் யார் என்றால் மோகன்ராஜ், தமிழரசனின் அப்பா ஆவார்.

5. யாரிடம் ஈட்டுக்கடன் பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் துரைசாமி மகன் குன்னுடையான் மகன் ஒண்டிமுத்து ஈடு எழுதிக்கொடுத்துள்ளார் அதில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். எவ்வளவு கடன் தொகை என்றால் ரூ.2,00,000/- ஆகும். 18.03.2025 ல் அவர் அடைமானம் வைத்தார். கிரையம் எவ்வளவு தொகைக்கு வாங்கினார் என்றால் ரூ.50,000/-க்கு வாங்கினார். ரூ.50,000/- பெருமான சொத்திற்கு 3 மாதத்தில் ரூ.2,00,000/- கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான் குடும்ப அவசர நிமித்தமாக வாங்கியுள்ளார்.

6. ஈட்டுக்கடன் பத்திரத்திற்கு எவ்வளவு பதிவு கட்டணம் செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது. ஒண்டிமுத்து வாங்கி ய பத்திரத்திற்கு எவ்வளவு பதிவு கட்டணம் செலுத்தப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. முருகேசன் தமிழரசன் குடும்பத்திற்கு உறவினரா என்றால் எனக்குத் தெரியாது. தமிழரசனும், மோகன்ராஜும் சேர்ந்து ஒண்டிமுத்துவிடம் எந்த தேதியில் கிரையத்திற்கு கேட்டார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தமிழரசனும், மோகன்ராஜும் சேர்ந்து ஒண்டிமுத்துவிடம் சொத்தை விலைக்கு கேட்கவில்லை என்றால் சரிதான். சொத்தின் மதிப்பு ரூபாய் 5 லட்சம் என்ற யார் சொன்னார்கள் எனறால் யாரும் சொல்லவில்லை.

7. ஒண்டிமுத்துவிற்கும் தமிழரசனும், மோகன்ராஜும் ஆகியோர்களுக்கு இடையே சொத்தை அனுபவம் செய்வதில் பிரச்சனை ஏற்பட்டதாக நான் சொல்வதற்கு எந்த தேதியில் ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்தை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றால் நான் தான் சாட்சி கையொப்பம் செய்தேன். ஒண்டிமுத்திற்கு நான் நெருங்கமானவர் என்பதால் நான் சொன்னபடி ஒண்டிமுத்து கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. முருகேசனும், ஒண்டிமுத்துவும் எந்த காலத்திலும் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை அனுபவம செய்யவில்லை என்றாலும், 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட முழுசொத்தும் பிரதிவாதிகள் குடும்ப அனுபவத்தில்

தான் உள்ளது என்றால் நேரிடையாக எனக்குத் தெரியாது. தமிழரசனுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதால் வா.சா.2, வா.சா.4 ஆவணங்கள் தயாரித்தற்கு உறுதுணையாக இருந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1ம் பிரதிவாதியின் மேற்படி குறுக்குவிசாரணை முழுவதையும் 2ம் பிரதிவாதி ஏற்றுக்கொள்கிறார்.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.01.22 18:08:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.